**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**MCOP.No. 5 /2024**

Deposition of witness for **PW2** for Petitioner and solemnly affirmed and oath for sworn taken file by Tr.S.Prakash, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Thomappan | Father Name | : | Muniyappan |
| Village | : | | Age | : | |

**நாள்:23.09.2025.**

**ம.சா.2. முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கில் 3ம் தரப்பினர், மனுதாரர்கள் தரப்பு சாட்சி ஆவேன்., ம.சா.2 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதனை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்து போனவர் எனது ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் எனக்கு உறவினர் என்றால் இல்லை. விபத்தில் இறந்து போனவர் வாகனத்தை ஓட்டி வரும் போது தலைகவசம் அணிந்து வரைவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த உடன் நான் யார் யாருக்கு முதலில் தகவல் கொடுத்தேன் என்றால் நான் யாருக்கும் தகவல் கொடுக்கவில்லை. இந்த விபத்தை நான் நேரில் பார்த்ததாக போலீசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்டததாக சொல்லப்படும் TNSTC Bus எந்த பக்கத்தில் இருந்து சென்றது என்றால் ஓசூரில் இருந்து தருமபுரி செல்லும் பஸ் ஆகும். விபத்தில் இறந்து போனவர் எந்த திசையில் சென்றார் என்றால் அவரும் அதே திசையில் சென்றார். விபத்தின் போது நான் எந்த இடத்தில் இருந்தேன் என்றால் நான் ராயக்கோட்டையில் இருந்து வீட்டிற்கு சாமான்கள் வாங்கி வரும்போது கொல்லம்பட்டி ஸ்டாப் அருகில் வந்தேன். விபத்து நடந்த பகுதிக்கும் எனக்கும் இடையே எவ்வளவு தூரம் இருந்தது என்றால் சுமார் 20 மீட்டர் தான் இருந்தது. விபத்து நடந்த சாலையானது விபத்து சமயத்தில் இருவழிசாலையாகத்தான் இருந்தது. விபத்தானது எனக்கு முன் பக்கம் நடந்தது. இந்த விபத்து யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்றால் ASTC Bus டிரைவர் காரணம். இருசக்கர வாகனத்தில் வந்தவர்திடீரென பிரேக் போட்டதால் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. இருசக்கர வாகனத்தில் வந்தவர் ஒருபுறமும் பஸ் ஒருபுறமும் சென்றது. இந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

விபத்தில் இறந்து போனவர் எனது ஊரை சேர்ந்தவர் என்றும் அவரது குடும்பத்திற்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக விபத்தை நேரில் பார்த்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தை நான் முதலில் பார்த்திருந்தால் நான் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்திருப்பேன் என்றும் நான் காவல் நிலையம்திற்கு தகவல் எதுவும் தெரிவிக்காததால் நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்./– எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.